**முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.**
**அ.வ.எண். 141/2018**

2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24 ம் நாள் புதன்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

வ.சா.1 மதுசூதன ராவ்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனக்கு தமிழ் தெரியும். நான் புகார் கொடுத்ததற்கு உரிய மனு ரசீதி தாக்கல் செய்துள்ளேன். நான் கூறிய குற்றச்சாட்டு பொய்யானது என்பதால் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மண் எடுத்துவிட்டார்கள் என்பதற்கு புகாரை தவிர வேறு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. எதிர்வாதி பி.சா.ஆ.1 ஆவணப்படி சட்டத்திற்குட்பட்டு நடந்துக்கொண்டார் என்றால் சரியல்ல. 15 வருடங்களுக்கு குத்தைகைக்கு கொடுத்தேன் 18 வருடங்கள் ஆகியும் பிரதிவாதி சொத்தை திருப்பி தராததாலும் மாதம் ரூ.5000/– வீதம் 36 மாதங்கள் வாடகை பாக்கியை பிரதிவாதி தரததாலும் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து ஒவ்வொரு நாளுக்கும் ரூ.1000/– இழப்பீடு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கட்டிடத்தை பிரதிவாதி சேதப்படித்தினார் என்பதற்கு புகைப்படங்கள் தாக்கல் செய்துள்ளேன். புகைப்படத்தை சட்டத்திற்குட்பட்டு நான் தாக்கல் செய்யாததால் அது செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் தற்போது பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்று எனக்கு தெரியாது. திருவெற்றியூர் நீதிமன்றத்தில் இது சம்மந்தமாக வேறு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்திற்கு சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. அம்பத்தூர் நீதிமன்றத்தில் நான் தெரியாமல் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன். அது தற்போது நிலுவையில் இல்லை.

2. நான் 1993 ல் சொத்தை கிரையம் வாங்கியதற்குரிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. கிராண்ட் பிளாசம் என்ற நிறுவனத்தில் நானும் ஒரு பங்குதாரர். அந்த நிறுவனத்திற்கும் பிரதிவாதியின் நிறுவனத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. நான் அனுப்பிய அறிவிப்பு பிரதிவாதிக்கு சார்பு செய்யப்பட்டது என்பதற்கு அஞ்சல் ஒப்புதல் அட்டையை தாக்கல் செய்துள்ளேன். கிராண்ட் பிளாசம் நிறுவனத்தில் நான், தண்டபாணி, அவரது மனைவி நித்யா தண்டபாணி ஆகியோர் பங்குதாரர்கள். தண்டபாணி தற்போது உயிருடன் இல்லை. குட்லக் மனமகிழ் மன்றத்தை தண்டபாணி நடத்தினாரா என்றால் அவர் செய்லாளராக இருந்தார். தலைவர் யார் என்று எனக்கு தெரியாது. கிராண்ட் பிளாசம் நிறுவனத்திற்கும் குட்லக் மனமகிழ் மனற்த்திற்கும் வியாபார ரீதியாக தொடர்பு இல்லை. இதற்கு முன்பு நான் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 1763/2015 வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தண்டபாணியின் மனைவி குத்தகை காலத்தை நீட்டிக்க கேட்டபோது நான் தொழிலை அபகரிக்கும் நோக்கில் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியை வெளியேற்ற வழக்கிற்கு முந்தைய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளததால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை இல்லை</u>

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.